FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318725

1. District : தேனி PS : V x AC, (தேனி) Year: 2026 FIR No.: 06/2026 Date: 03.11.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by PC (amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from 30.10.26 Date to : 02.11.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாளை நாள் வரை
Time Period : Time from நேரம் 11.00 மணி & Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 03.11.2026 Time : 09.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 03.11.2026 Time : 10.00hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் தொலைபேசி தகவல்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: நாணல் ஊரணி பஸ் - 1 நிறுத்தம் அருகில் அலுவலகம், பெரியகுளம் தாலுகா, தேனி மாவட்டம்
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : நிறுத்தம் 3 km தூரத்தில்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கா. கார்த்திகேயன் (b) Father's/ Husband's Name : —
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர் கானகயப்பன்

(c) Date / Year of Birth : 27/08/1994 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : பேன்ட் தொழில் (g) Address : No 5. பெரியார் காலனி, நாணல் ஊரணி பஸ் I. T. கம்பெனி, பெரியகுளம் தாலுகா தேனி மாவட்டம்
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
விக்கி, நாணல் ஊரணி பஸ் நிறுத்தம் அருகில், நாணல் ஊரணி பஸ் - 1, பெரியகுளம் தாலுகா, தேனி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Computer Typed separate sheet attached

—

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

T.R.C 03.11.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

03.11.2026.
11.00hrs.

Name: பெயர் T. RAMESWARI
Rank: நிலை Inspector of Police, No. எண் VRAC, Theni

12. F.I.R. contents (Attach separate sheet if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.**06/2026**-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது: தேனி, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 03.11.2026-ஆம் தேதி 09.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, ர.கள்ளிப்பட்டி, தாமரைக்குளம் பிட்-1, எண்.5, பெரியார் காலனி, என்ற முகவரியில் வசிக்கும் காளியப்பன் மகன் கா.காளிதாஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணிணி தட்டச்சு செய்யப்பட்ட புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேலே கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனது 3 பிள்ளைகளும் திருமணமாகி வாழ்ந்து வருகிறார்கள். எனக்கு வயது 67 ஆகிறது, நான் பேண்ட் வாத்திய செட் தொழில் செய்து வருகிறேன். எனது அம்மா காளியம்மாள் பெயரில் தாமரைக்குளம் பிட்-1 சர்வே எண்.935-ல் 2ஏக்கர் 35 செண்ட் நிலம் இருந்ததை அவரின் பிள்ளைகளான எனக்கும், எனது சகோதரர்கள் நாகராஜ், ராமு, முருகன் ஆகியோருக்கு ஆளுக்கு 58 ¾ செண்ட் வீதம் செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார்கள். பெரியகுளம் எண்.1 இணை சார்பதிவாளர் ஆவண எண்.1251/2018-ன்படி எனக்குரிய பங்கை எனது தாய் எனக்கு பதிவு செய்து கொடுத்தார். எனது 3 சகோதரர்கள் அவர்கள் பெயரில் இருந்த எனது தாய் கொடுத்த நிலங்களை விற்றுவிட்டார்கள். என்னுடைய பங்கை இன்னும் விற்கவில்லை. என்னுடைய குடும்ப செலவுக்காக இந்த நிலத்தை விற்பதற்காக நான் முயன்றபோது தனிப்பட்டா எனது பெயரில் இல்லாததால் விற்கமுடியாமல் தாமதமாகி வருகிறது. எனவே நான் எனது உறவினர் சின்னையா என்பவருடன் பெரியகுளம் தாலுகா அலுவலகம் சென்று பட்டா குறித்து அங்கிருந்த சர்வேயரை விசாரித்தபோது எனது நிலத்தின் பட்டா தவறுதலாக சரவணக்குமார் என்பவர் பெயரில் பதிவாகியுள்ளது என்றும், எனது பெயரில் பட்டா வாங்க ஆன்லைனில் விண்ணப்பித்துவிட்டு விஏஓ அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு சொன்னார். அதன்படி நான் 01.09.2026-ம் தேதி ஆன்லைனில் பட்டா கோரி விண்ணப்பத்தினேன். கடந்த அக்டோபர் மாதம் பலமுறை எனது பட்டா விண்ணப்பித்த விவரம் குறித்து நாங்கள் தாமைரைக்குளம் விஏஓ வித்யா மேடம் அவர்களை போய் அலுவலகத்தில் பார்த்ததில் விரைவில் ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி அலைக்கழித்தார். எனக்கு இதுபற்றி விவரம் தெரியாததால் எனது உறவினர் சின்னையாவிடம் பட்டா கிடைப்பது குறித்து நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். இந்நிலையில் சென்ற மாதம் 29-ம் தேதி இரவு தாமரைக்குளம் விஏஓ ஆபிசில் பணிபுரியும் கிராம உதவியாளர் சின்னமுத்து

என்பவர் சின்னையாவிற்கு போன் போட்டு பட்டா சம்மந்தமாக மறுநாள் அக்டோபர் 30-ம் தேதி காலையில் விஏஓ ஆபிசிற்கு வரச்சொல்லியதாகவும் என்னிடம் சின்னையா தகவல் சொல்லியதில், அதன்படி சென்ற மாதம் 30-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு தாமரைக்குளம் விஏஓ ஆபிஸ் சென்று அங்கிருந்த விஏஓ வித்யா மேடத்தை நானும் சின்னையாவும் பார்த்து விவரம் கேட்டோம். விஏஓ அவர்கள் எங்களிடம் உங்க பட்டா அப்ளிகேசன் துணை வட்டாட்சியரால் நிராகரிக்கப்பட்டு விட்டதாகவும், பட்டா வாங்க நான் ஏற்பாடு செய்கிறேன் என்றும் சரியாக தனிப்பட்டா உங்கள் பெயரில் கிடைக்க வேண்டுமென்றால் நிறைய செலவாகும் என்றும் அலைச்சல் இல்லாமல் சீக்கிரம் பட்டா வேண்டுமென்றால் நான் சொல்கிறபடி செய்யுங்கள் என்றார். நாங்கள் சரி என்றதும் இன்றே மீண்டும் ஆன்லைனில் பட்டா கோரி விண்ணப்பிக்குமாறும் சொன்னார். மேலும் இந்தமுறை பட்டா கிடைக்கவேண்டுமென்றால் லஞ்சமாக ரூ.30,000/- பணம் கொண்டு வாங்க என்று கேட்டார். நான் ரொம்ப அதிகமா இருக்கே என்றும், இவ்வளவு செலவாகுமா என்றும் கேட்டபோது நான் தான் எல்லாம் சரிசெய்து ரெடிபண்ணனும், விண்ணப்பம் செய்து விட்டு வாங்க பார்க்காலம் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன்படி நானும் 30.10.2026-ம் தேதி ஆன்லைனில் மீண்டும் புதியதாக பட்டா கோரி விண்ணப்பித்தேன். 02.11.2026-ம் தேதி திங்கட்கிழமை சின்னையா என்னிடம் தாமரைக்குளம் விஏஓ தனக்கு போன் செய்து வருவதாகவும், எதற்கும் நேரில் சென்று பார்த்து வருவோம் வாருங்கள் என்று சொன்னபடி நாங்கள் இருவரும் நேற்று மதியம் விஏஓ வித்யாவை அவரது தாமரைக்குளம் அலுவலகத்தில் சென்று பார்த்தோம். அவர் பணம் ரெடியா என்றார். நான் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கெஞ்சி கேட்டவுடன், அவர் சரி ரூ.20,000/- கொடுங்கள் என்று கேட்டார். பணம் கொடுக்க மறுத்தால் பட்டா கிடைக்காதோ என்ற பயத்தில் நான் பணம் ஏற்பாடு செய்துவிட்டு நாளை கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து நாங்கள் கலந்து பேசியதில் எனது நியாயமான கோரிக்கையை பெற்றுதரவும், எனது பெயரில் தனிப்பட்டா வழங்க பரிந்துரை செய்து உரிய ஏற்பாடு செய்து கொடுக்கவும், அரசு வேலையை செய்ய சட்டத்திற்கு புறம்பாக என்னிடம் ரூ.20,000/- லஞ்சமாக கேட்ட தாமரைக்குளம் பிட்-1 விஏஓ திருமதி.வித்யாவிடம் லஞ்சம் கொடுக்க நான் விரும்பவில்லை. எனவே இன்று 03.11.2026ம் தேதி நான் உறவினர் சின்னையாவுடன் விஏஓ என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.20,000/-உடன் தாமரைக்குளம் பிட்-1 விஏஓ திருமதி.வித்யா என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தேனி அலுவலகம் வந்து இந்த புகார் கொடுக்கிறேன். இத்துடன் எனது தாய் எனக்கு எழுதிகொடுத்த நிலசெட்டில்மெண்டு பத்திரம் எண்.1251/2018 நகல் இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கவும். இப்படிக்கு Sd/XXXXXX (கா.காளிதாஸ்) நாள்: 03.11.2026.

Sir, Received this complaint on 03.11.2026 at 09.00 hrs. A confidential verification was conducted in respect of the complaint and the complainant through sources and found as genuine and good respectively. The reputation of the accused was also verified and found as bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crime No.06/2026, u/s 7 of the Prevention of Corruption Act 1988, as amended by the PC (amendment) Act 2018 is registered on 03.11.2026 at 10.00hrs. Sd/- (T.Rameswari, Inspector of Police, VAC, Theni – 03.11.2026).

Original FIR along with original complaint of Tr.K.Kalidoss with copy of No.1, Joint Sub-Registrar, Periyakulam Settlement deed doc No. 1251/2018(1 to 11 sheet) is sent to the Hon'ble Principal District judge / Session Judge Court Theni District and copies are sent to the officers concerned.

T.R. 03.11.26

(T.RAMESWARI)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Theni District.